**செய்தி வெளியீடு** **நாள் : 29.09.2025**

**வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, அயனாவரம், யுனைடெட் இந்தியா நகரில் "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.9.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, அயனாவரம், யுனைடெட் இந்தியா நகர் பொது நூலகத்தை மேம்படுத்தி, **சி.எம்.டி.ஏ. சார்பில் புதிய "முதல்வர் படைப்பகம்"** அமைப்பதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு, பணிகளை தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னையில் 30 **முதல்வர் படைப்பகங்கள்** அறிவிக்கப்பட்டு, 2 **முதல்வர் படைப்பகங்கள்** திறக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இன்று அயனாவரம், யுனைடெட் இந்தியா நகரில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் 13,070 சதுர அடியில், தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய புதிய **"முதல்வர் படைப்பகம்"** அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு.பாலமுருகன், மண்டலக் குழுத்தலைவர் திரு.கூ.பீ.ஜெயின், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.வே.வாசு, திரு.வேதா, மாமன்ற உறுப்பினர் திருமதி.லதா வாசு, துணை இயக்குநர் (பொது நூலகம்) திருமதி.தனலஷ்மி, மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா, அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate ™